3

## சுருக்கம்

அலுவலக நடைமுறை – அலுவலக ஆணை, கடிதங்கள் மற்றும் ஏனைய வெளியீடுகளில் கிறித்துவ ஆண்டுக்கு நேரான தமிழ் திங்கள், நாள், திருவள்ளுவர் ஆண்டு பயன்படுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எ) துறை

அரசு ஆணை (நிலை) எண்.70 நாள்: 09 .04.2008.

பங்குனி 27, திருவள்ளுவர் ஆண்டு 2039.

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண்.91, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எ) துறை, நாள்: 03.02.1981.

2. தமிழ் நாடு அரசு சிறப்பு அரசிதழ் எண். 38, நாள்: 11.02.2008.

---

ஆணை:

பார்வை 1–ல் காணும் அரசு ஆணையில், அலுவலக ஆணை, கடிதங்கள், மற்றும் ஏனைய அரசு வெளியீடுகளில் கிறித்துவ ஆண்டுக்கு நேரான தமிழ் ஆண்டு, திங்கள், நாள் மற்றும் திருவள்ளுவர் ஆண்டு ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2. பார்வை 2–ல் காணும் தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள, தமிழ் நாடு தமிழ் புத்தாண்டு (சாற்றுரை) சட்டம், 2008 (சட்ட எண் 2 / 2008) – இல் "தைத் திங்கள்" முதல் நாள் தமிழ் ஆண்டின் முதல் மாதம் தொடங்கும் என்றும் "மார்கழித் திங்கள்" கடைசி நாளில் தமிழ் ஆண்டு முடிவடையும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. எனவே, அரசு ஆணைகள், தமிழ்நாடு அரசிதழ், அரசு கடிதங்கள் மற்றும் ஏனைய வெளியீடுகளில் "சர்வஜித்" என்ற தமிழ் ஆண்டினை நீக்கியும், இனிவருங்காலங்களில் "பிரபவ முதல் அட்சய" வரை உள்ள அறுபது ஆண்டுகளின் பெயர்களைப் பயன்படுத்த வேண்டாம் என்றும், கிறித்துவ ஆண்டுக்கு நேராகத் தமிழ் திங்கள், நாள் மற்றும் திருவள்ளுவர் ஆண்டு ஆகியவற்றை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

திரு. ஸ்ரீதர்,
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து துறைச் செயலாளர்கள், சென்னை – 9.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை – 9.
அனைத்து துறைத் தலைவர்கள்.
மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகள் உட்பட.
செயலாளர், தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு, சென்னை – 2.

நகல்:
அனைத்து பிரிவுகள் / அதிகாரிகள், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை, சென்னை – 9.
பணி மேலாளர், தமிழ் நாடு அரசு மைய அச்சகம், சென்னை – 79.
செயலாளரின் தனிச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(எச். வில்லியம்) 9.4.08
பிரிவு அலுவலர்